**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு T. சோழவேந்தன், B.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

*******

2023–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8–ம் நாள் வெள்ளிக்கிழமை

******

**இடைமனு எண்.8/2023 –ல் இடைமனு எண் 5/2023–ல்**
**அசல் வழக்கு எண். 225/2022**

மாதவன் .....மனுதாரர்/வாதி

...எதிராக...

1. கணேசன் (இறந்தார்)
2. வைத்தியலிங்கம .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
3. சாரதா
4. நாராயணன்
5. சீத்தா
6. லட்சுமி ...வழக்காடிகளாக சேர்க்கப்பட வேண்டியவர்கள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 04.12.2023 அன்று இறுதியாகவிசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு B.முருகவேலு அவர்களும், முதல் எதிர்மனுதாரர் இறந்துள்ளார். 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு K. சங்கரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

முதல் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் வாரிசுகளான 3 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களை இடைமனு எண்5/2023–ல் எதிர்மனுதாரர்/ பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல் நடத்த வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரர்/வாதி இம்மனு உ.வி.மு.ச.கட்டளை-6, விதி-17-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மனுதாரர் அசல் வழக்கில் வசப்பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் உள்ளபோது அசல் வழக்கின் 1-ம் பிரதிவாதி கணேசன் 14.07.2023-ம் தேதியன்று இறந்துவிட்டார். இறந்த 1-ம் பிரதிவாதிக்கு சாரதா, நாராயணன், சீத்தா, லட்சுமி ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் ஆவார்கள். மேற்படி நபர்களை அசல் வழக்கில் வழக்காடிகளாக சேர்க்க இடைமனு எண்.6/2023–ல் மனு தாக்கல் செய்து கடந்த 16.10.2023 அன்று மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி வழக்குரையில் 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளான 3 முதல் 6 தரப்பினர்களை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல்நடத்த வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லையென்றால் மனுதாரர்/வாதிக்கு மிகுந்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். எனவே முதல் பிரதிவாதியின் வாரிசுகளான 3 முதல் 6 வரையிலான தரப்பினர்களை இடைமனு எண்5/2023–ல் பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல் நடத்த வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையை 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தங்களுடையதாகவும் ஆட்சேபணை குறிப்பாணையின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதின் சுருக்கம்.**

(i) இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்க தக்கதல்ல. மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள விபரங்கள் உண்மையல்ல. அவைகளை எதிர்மனுதாரர் திட்டவட்டமாக மறுக்கிறார். மனுதாரர் அதனை நிரூபிக்க கடமைப்பட்டவர். இம்மனு உரிய முறையில் உரிய நபரால் உரிய காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்படவில்லை. அசல் வழக்கில் மட்டும் வாரிசு சேர்க்க இடைமனு எண்.6/2023 தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல. மற்ற இடை மனுக்கள் நிலுவையில் இருக்கும்போது அந்த மனுக்களுக்கும்

செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல. தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது.

(ii) மனுவில் தெரிவித்துள்ள திருத்த விபரங்கள் முழுமையாக இல்லை. அது தவறாக உள்ளது. நெடுந்தலைப்பில் வைத்தியலிங்கம் என்பதற்கு கீழே சாரதா, நாராயணன், சீத்தா, லெட்சுமி ஆகியோர்களை சேர்க்க வேண்டுமென தெரிவித்துள்ளதில் வரிசை எண்கள் தவறாக கொடுக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

3. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

<u>தீர்வு:</u>

5. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கை மனுதாரர்/வாதி வசப்பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இறந்த 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க இடைமனு எண் 6/2023 தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. இடைமனு எண் 6/2023–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் தொடர்ச்சியாகத்தான் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ள இறந்த 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளான 3 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்தால் வழக்கின் வழக்கு மூலமோ, வழக்கின் தன்மையோ மாறிவிடப்போவதில்லை என்பதாலும், மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் பின்னிட்டு ஒரே பொருண்மையின் அடிப்படையில் ஏற்படும் (Multiplicity proceedings) வழக்கு நடிவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டு

தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும் மனுவின் தன்மை கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சணைக்கு தீர்வு காண்கிறது.

இறுதியில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.8/2023–ல்
இடைமனு எண் 5/2023 –ல்
அசல் வழக்கு எண்.225/2022
நாள்.08.12.2023.